—ஒரு வேலையை செய்து முடித்தால் அதைத் தெளிவாகச் செய்ய வேண்டும், அரைகுறையாகச் செய்யக்கூடாது என்றுதான் இப்படி மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருக்கிறது. அங்கே பாலத்தைக் கட்டி அணுகு சாலை அமைத்தால்தான் போக்குவரத்துக்கு ஏதுவாக இருக்கும். ஆகவே அந்த அடிப்படையிலேதான் இதுபோன்ற மதிப்பீடு தயாரிக்கப் பட்டிருக்கிறது. அவர் சொன்னதுபோல் தரைப்பாலம் கட்டுவதற்கான வாய்ப்புகளை வேண்டுமானால் அரசு ஆராயும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 209, திரு. ஆ. பாலையா, இருக்கையில் இல்லை.

வினா எண். 210, திரு. கே. ஏ. மனோகரன், இருக்கையில் இல்லை. அவருக்குப் பதிலாக திரு. கே. முனிவெங்கடப்பன், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்.

210 —

ஒசூரில் சிட்கோ தொழிற்பேட்டை அமைத்தல்

* **16974** *திரு. கே. ஏ. மனோகரன்* :

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், ஓசூர் தொழிற்பேட்டை II-ல் அசோக் லேலண்ட் நிறுவனம் வர உள்ளதால், அங்கு சிட்கோ (SIDCO) தொழிற்பேட்டை அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எத்தனை தொழிற்கூடங்கள் கட்டப்பட உள்ளன ?

மாண்புமிகு திரு துரை ராமசாமி, ஊரகத் தொழில் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

முற்பகல் 10.35

திரு. கே. முனிவெங்கடப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகம் தொழில் துறையிலே 7-வது இடத்திலே இருந்ததை இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி ஆட்சி பொறுப்புக்கு வந்த பின் இன்றைக்கு இந்தியாவிலேயே 3-வது இடத்திலே தொழில் துறையில் நமது மாநிலம் இருந்து வருகிறது. ஓசூரில் பல்வேறு பெரிய தொழிற்சாலைகள்

1995 ஏப்ரல் 4]

எல்லாம் ஆரம்பிக்கப்பட்டு, தொழில் அமைதியோடு நல்ல முறையிலே நடைபெற்று வருகின்றன. இப்படி பெரிய தொழிற்சாலைகள் அங்கே நிறைய இருக்கின்ற காரணத்தினாலே, அங்கே சிட்கோ தொழிற்சாலை அமைத்தால், அந்த பெரிய தொழிற்சாலைகளுக்கு நிறைய உப பொருட்கள் தேவைப்படுவதால், அவைகளை உற்பத்தி செய்வதற்கு ஏதுவாக இருக்கும். ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இவ்வாண்டில் இல்லையானாலும், வருகின்ற நிதியாண்டிலாவது இதற்கு ஏற்பாடு செய்வாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரை ராமசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அசோக் லேலண்ட் நிறுவனம் வர உள்ளதா என்ற கேள்வியை கேட்டு உள்ளார்கள். அசோக் லேலண்ட் நிறுவனம் வருவது சிப்காட் தொழிற்பேட்டையிலே அது வருகிறது. அதற்கும் இதற்கும் எந்த சம்பந்தமும் இல்லை. சிட்கோவை பொறுத்தவரை ஏற்கெனவே ஓசூரில் 155 கூடங்கள் கட்டி எல்லோருக்கும் கொடுக்கப்பட்டு இருக்கின்றன. பிறகு சிறு தொழில்களுக்காக 24 கூடங்கள் கட்டி அவைகளும் மற்றவர்களுக்காக ஒதுக்கப்பட்டு இருக்கின்றன. மேலும் தொழில் முனைவோர் முன்வருவார்களேயானால் அதைப்பற்றி அரசு பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கா. பூ. முனுசாமி.

திரு. கா. பூ. முனுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே தர்மபுரி மாவட்டத்தில் போச்சம்பள்ளியில் சிட்கோவின் மூலமாக நிலங்கள் கையகப்படுத்தப்பட்டு தொழில் தொடங்கப்பட்டுள்ளது. மேலும், ஓசூர் நகரத்திலும் பெரிய தொழிற்சாலைகள் கிட்டத்தட்ட 100 தொழிற்சாலைகளுக்கு மேலே இருந்து கொண்டு இருக்கின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்கெனவே கூறியதுபோல, ஒதுக்கப்பட்ட அத்தனை கூடங்களையும் தொழில் முனைவோர் ஏற்றுக்கொண்டு இருக்கின்ற காரணத்தினால், புதிய தொழில் முனைவோர் அங்கே நிறைய பேர் இருந்து கொண்டு இருக்கின்ற காரணத்தினால், அரசு இரண்டாவது பேட்சிலே நிறைய நிலங்களை கையகப்படுத்தி இருக்கின்ற காரணத்தினால், இந்தப் பகுதியிலே அடுத்த நிதியாண்டிலாவது இதைக் கொண்டு வருவதற்கு அமைச்சர் முன்வருவாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரை ராமசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேலே கூறப்பட்ட தொழிற்பேட்டைகளைத் தவிர சிட்கோ நிறுவனம் தற்போது தொழில் வணிகத் துறைக்காக ஓசூரிலே ஆர்ஜிதம் செய்து 9.90 ஹெக்டேர் நிலத்தை பெற உள்ளது. எல்லா நிலங்களும் சிட்கோவுக்கு மாற்றம் செய்யப்பட்ட உடன், அங்கு ஒரு தொழிற்பேட்டை உருவாக்க சிட்கோ நடவடிக்கை எடுக்கும்.